**சுற்றறிக்கை இலக்கம் : 08/2006**

எனது இல: எம்//01/42

2006.08.30

அனைத்து மாவட்டச் செயலாளர்கள் / மேலதிக பதிவாளர் நாயகங்களுக்கு,

**விவாக, பிறப்பு மற்றும் இறப்புப் பதிவாளர்கள் ஆட்சேர்ப்பு முறைமையினை திருத்தம் செய்தல் - 2006 ஆம் ஆண்டு**

கௌரவ பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சரினால், பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் 2006.08.10 ஆம் திகதிய ABD/BR/பொது (XV) இலக்கக் கடிதத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டதாக எனக்கு அறிவிக்கப்பட்டுள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்புப் பதிவாளர்கள் ஆட்சேர்ப்பு முறைமையின் திருத்தப்பட்ட பிரதியொன்றை இத்துடன் உங்களுக்கு அனுப்பி வைக்கிறேன். இத் திருத்தப்பட்ட நடைமுறையானது உடனடியாக அமுலுக்கு வருகின்றது.

2. இத் திருத்தங்கள் மூலம் விவாக, பிறப்பு மற்றும் இறப்புப் பதிவாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக இதுவரை பின்பற்றப்பட்ட நடைமுறைகளில் பின்வரும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன:

| தற்போதுள்ள ஏற்பாடுகள் | புதிய திருத்தங்கள் |
|---|---|
| **(i) ஆட்சேர்க்கப்படும் வயது:-**<br>விண்ணப்பதாரர்களின் வயது, விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியன்று 21 வயதிற்குக் குறையாமலும் 60 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.<br>**(ii) ஓய்வுபெறுவதற்கான அதிகூடிய வயது 75 ஆகும்.** | விண்ணப்பதாரர்களின் வயது, விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியன்று 21 வயதிற்குக் குறையாமலும் 65 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.<br>**(iii) ஓய்வுபெறுவதற்கான அதிகூடிய வயது 70 ஆகும்.** |
| **2. புள்ளி வழங்கும் முறை:-**<br>(அ) நற்பண்பு / சமூக அந்தஸ்து / மக்களின் வரவேற்பு / வருமான நிலை - 20 புள்ளிகள்.<br>(ஆ) பதில் கடமை பதிவாளர்களின் சேவைக் காலத்திற்குப் புள்ளிகள் வழங்கப்படவில்லை. | (அ) நற்பண்பு / சமூக அந்தஸ்து / மக்களின் வரவேற்பு / வருமான நிலை - 15 புள்ளிகள்.<br>ஆ) பதில் கடமை பதிவாளர்களுக்கு - 05 புள்ளிகள். (ஒரு வருடத்திற்கு மேற்பட்ட பதில் கடமை காலத்திற்கு 05 புள்ளிகளும், ஒரு வருடத்திற்குக் குறைந்த ஆனால் 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலத்திற்கு 03 புள்ளிகளும் வழங்கப்படும்). (பதிலீடாகக் கடமையாற்றியவர்களுக்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது). |

03. இந்தப் புதிய நடைமுறையை நன்கு ஆராய்ந்து, இனிவரும் காலங்களில் நடத்தப்படும் அனைத்து நேர்முகப் பரீட்சைகளிலும் இதற்கமையச் செயற்படுமாறு உங்கள் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்குத் தயவுசெய்து அறிவுறுத்தல் வழங்கவும்.

(ஒப்பம்)

எல். கே. ரத்னசிறி

பதிவாளர் நாயகம்

**பிரதிகள்:-**

1. செயலாளர், பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு - தகவலுக்காக.
2. நிறுவனப் பணிப்பாளர் நாயகம் - தகவலுக்காக.
3. அனைத்து வலய உதவிப் பதிவாளர் நாயகங்கள் - தகவலுக்காக.
4. அனைத்து காணி மற்றும் மேலதிக மாவட்டப் பதிவாளர்கள் - மேலதிக நடவடிக்கைகளுக்காக.
5. அனைத்து பிரதேச செயலாளர்கள் - தகவல் மற்றும் மேலதிக நடவடிக்கைகளுக்காக.